# தலைநகரில் சூடுபிடிக்கும் தீபாவளி விற்பனைகள்!

(ஆர். குணா)

*கோலாலம்பூர், அக். 16-*
*தலைநகரில் தீபாவளி விற்பனைகள் சூடிபிடிக்க தொடங்கியுள்ளன. இதனால் வர்த்தகர்களும் மக்களும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.*

ஒவ்வோர் ஆண்டு தீபாவளிக்கும் லெபோ அம்பாங்கில் தீபாவளிச் சந்தை ஏற்பாடு செய்யப்படும். பெரிய அளவில் கலை நிகழ்ச்சிகள் நடைபெறும்.

ஆனால் இம்முறை அதற்கான வாய்ப்புகள் கிடைக்கவில்லை. இருந்த போதிலும் வசதி குறைந்த மக்களுக்கு உதவும் நிகழ்ச்சி வழக்கம் போல் நடைபெறும்.

தீபாவளி விற்பனைகள் தற்போது தான் சூடு பிடிக்க தொடங்கியுள்ளன. இறுதி நேரத்தில் பொருட்கள் வாங்க அதிகமான மக்கள் வருவர்.

அதற்காக லெபோ அம்பாங் இந்திய வர்த்தகர்கள் தயாராகி வருகின்றனர் என்று அப்பகுதி வர்த்தகர் சங்கத்தின் தலைவர் டத்தோ அப்துல் ரசூல் செய்தியாளர்களிடம் கூறினார்.

கடந்தாண்டு தீபாவளிக்கு நடமாட்டக் கட்டுப்பாட்டு உத்தரவு அமலில் இருந்தது. இதனால் வர்த்தகம் பெரும் பாதிப்பை எதிர்நோக்கி வந்தது.

ஆனால் இம்முறை பல தளர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.


வனஜா


அப்துல் ரசூல்


ராசையா


சண்முகம்


சரவணகுமார்


சிவதாசன்


ரத்னா


தேவி



குறிப்பாக மக்கள் மாநில எல்லையைக் கடக்க அரசாங்கம் அனுமதி வழங்கியுள்ளது.

இதனால் மக்கள் பொருட்களை வாங்க இப்பகுதிக்கு வர தொடங்கியுள்ளனர். இதனால் வர்த்தகமும் சூடு பிடிக்க தொடங்கியுள்ளது என்று லெபோ அம்பாங் சென்னை போத்தீஸ் நிர்வாகி சரவணகுமார் கூறினார்.

கோவிட்-19 தொற்றுக்கு பின்

தொடர்ச்சி பக்கம் 12

# ஈப்போ லிட்டில் இந்தியாவில் தீபாவளி விற்பனை களைகட்டியுள்ளது!

(எஸ். பி.பிரபாகரன்)

ஈப்போ, அக். 16-
தீபாவளியை முன்னிட்டு ஈப்போ லிட்டில் இந்தியாவில் விற்பனைகள் களைகட்டியுள்ளது. எஸ்ஓபி விதிமுறைகளுடன் மக்கள் பொருட்களை வாங்கி செல்கின்றனர்.

கோவிட்-19 தொற்றின் தாக்கத்தால் பல மாதங்களுக்குப் பின்னர் வர்த்தகங்கள் மீண்டும் நடத்த வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளதால் வணிகர்களும் வாடிக்கையாளர்களும் மகிழ்ச்சியில் மூழ்கியுள்ளனர். வர்த்தகம் முடங்கியிருந்த நிலையில். இந்த வட்டா ரத்தில் வாடிக்கையாளர் கள் திருமணம், தீபாவளிக்கு துணிமணி கள், நகைகள் வாங்கு வதற்கு வந்த வண்ணம் உள்ளனர்.

தீபாவளி கொண்டாட் டத்திற்கு இன்னும் 18 நாட்கள் எஞ்சியிருக்கும வேளையில் குடும்பத் திற்கு தேவையான பொருட்கள் வாங்க வந்துள்ளதாக வாடிக்கை யளர் எஸ். சுப்பிரமணியம் கூறினார்.

கோவிட்-19 தொற்றி னால் பலர் வீட்டை விட்டு வெளியேற பயந்து வந்தனர். அதன் தாக்கம் தற்போது குறைந்து வருவதால் ஈப்போ நகரில் மக்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளது.

மக்களில் பலர் அச்ச த்துடன் வீட்டை விட்டு வெளியேறி வந்தாலும் பெரும்பாலோர் முறையே எஸ். ஓ. பி. விதிமுறை களை பின்பற்றி வரு வதை காண முடிகிறது.

இதை அனைவரும் தொடர்ந்து பின் பற்றினால் இந்த நோயைக் கட்டுப்படுத்த முடியும் என்றார்.

கடந்த இரண்டு ஆண்டுகள் ஈப்போ லிட்டில் இந்தியாவில் அனைத்து கடைகளும் மூடப்பட்டதால் வர்த்தகம் மட்டும் பாதிப்பு அடையவில்லை, மாறாக பல தொழிலாளர்கள் வேலையிழந்த சோகமும் நிகழ்ந்துள்ளது. அரசாங்கம் வர்த்தக தளர்வை ஏற்படுத்தியுள்ளதால் வணிகர்களுக்கும் மற்றும் தொழிலாளர்களுக்கும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என்று பிரியங்கா ஜவுளி நிறுவன உரிமையாளர் எஸ். ராஜேந்திரன் குறிப்பிட்டார்.

இந்த மகிழ்ச்சி நிலைக்க வாடிக்கையாளர் கள் தொடர்ந்து எஸ்.ஓ.பி. விதிமுறைகளை பின் பற்றவேண்டும் என்று அவர் வலி யுறுத்தினார். கடந்த இரண்டு ஆண்டு களாக கோவிட்-19 தொற்றிலிருந்து மக்கள் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்கி வருகின்றனர். அதிலிருந்து விடுபட மக்களின் ஆதரவு அவசியம் என்று லிட்டில் இந்தியா வளாகத்தில் ஜவுளி வாங்க வந்த வழக்கறிஞர் மு. கமலநாதன் வேண்டுகோள் விடுத்தார்.

பல மாதங்களாக முடக்கம் கண்ட தையல் தொழிலுக்கும் விடிவுகாலம் பிறந்துள்ளது என்று தையல் தொழில் செய்து வரும் எஸ். உமா தெரிவித்தார்.

வழக்கம் போல் வாடிக்கையாளர்களின் வருகை பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்துவதாக அவர் நண்பனுக்கு அளித்த பேட்டியில் குறிப்பிட்டார்.

வர்த்தகம் வழக்கம் போல் இங்கு நடைபெற வாடிக்கையாளர்களின் ஒத்துழைப்பு அவசியம் என்று வணிகர்களான வி. குமார், க. ஞானம், எம். ராஜன் ஆகியோர் தெரிவித்தனர்.


ஜவுளி நிறுவனம்


கமலநாதன்


குமார்


ஞானம்


ராஜன்


சுப்பிரமணியம்


உமா


நகைக் கடையில் வாடிக்கையாளர்கள்


ஜவுளி நிறுவனம்




MALAYSIA NANBAN Published by Penerbitan Sahabat (M) Sdn. Bhd. (157000-T) No.544-1, Batu Complex off Jalan Ipoh Batu 3¼, 51200 Kuala Lumpur Tel : 03-62515981 Editorial (Fax) 03-62591617 E-mail: mnanban12@gmail.com
Advertisement (Fax) 03-62515986 E-mail: advertnanban@gmail.com Printed by: PENERBITAN SAHABAT (M) SDN. BHD. No.8, Jalan 32/10A, Taman Perindustrian IKS (MIEL), Mukim Batu, 68100 Batu Caves.